**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்**
**C.O.S. No. 19/2023**

| | |
|---|---|
| **பிரதிவாதி தரப்பு சாட்சி** | : **3** |
| பெயர் | : **திரு. தயாளகுமார்** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : **திரு.** |
| தொழில் | : |
| கிராமம் | : |
| தாலுகா | : |

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு.ந.குணசேகரன், எம்.பி.ஏ., பி.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, திருப்பூர் அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**<u>பிரதிவாதி தரப்பு 3 வது சாட்சியின் முதல்நிலை விசாரணை.</u>**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அந்த அழைப்பாணை X–1 ஆகும். பிரதிவாதி ஈஸ்வரன் இந்துஸ்தான் லிவரில் பணியாற்றி வந்தார். பிரதிவாதி ரூபாய் 60 இலட்சத்திற்கு பொருள் வாங்கியதாக வழக்கு தொடரப்பட்டுள்ளது. பிரதிவாதியின் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் சுமார் 2500 அடி தூரம் தான் இடைவெளி இருக்கும். பிரதிவாதியின் வீடு சுமார் 1500 சதுரடி தான் இருக்கும். ரூபாய் 60 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் வைப்பதற்கான போதிய இடம் அவரது வீட்டில் இல்லை. பிரதிவாதி எனக்கு சிறு வயதிலிருந்தே பழக்கம். பிரதிவாதி பெயரில் வேறு ஏதாவது வீடு மற்றும் குடோன்கள் இல்லை.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**(வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN
Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2025.11.18 19:35:07 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்**
**C.O.S. No. 19/2023**

| | | |
|---|---|---|
| **பிரதிவாதி தரப்பு சாட்சி** | : | **4** |
| பெயர் | : | **திரு. சேதுபதி** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | **திரு. பொன்ராஜ்** |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு.ந.குணசேகரன், எம்.பி.ஏ., பி.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, திருப்பூர் அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

<u>பிரதிவாதி தரப்பு 4 வது சாட்சியின் முதல்நிலை விசாரணை.</u>

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அந்த அழைப்பாணை X–2 ஆகும். பிரதிவாதி ஈஸ்வரன் எனக்கு சிறு வயது முதல் நண்பர். அவரது வீடு எனது வீட்டிலிருந்து 500 மீ தொலைவில் உள்ளது. அவர் இந்துஸ்தான் லீவர் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். அவரது வீடு 1500 சதுரடியில் அமைந்துள்ளது. ஆகவே, அவரது வீட்டில் ரூபாய் 90 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை வைப்பதற்கு இடம் இல்லை.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

**(வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2025.11.18 19:35:14 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.